# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 10 | பரதநாட்டியம் I | நேரம்: 3.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................................

கவனிக்க:

- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❖ 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- ❖ உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை **(X)** இடுக.

1. அரங்கேற்ற நிகழ்வில் இடம்பெறும் முதல் உருப்படி.
   1. ஜதீஸ்வரம் 2. புஷ்பாஞ்சலி 3. அலாரிப்பு 4. வர்ணம்

2. இனிமையான ரசனையை ஏற்படுத்தும் இயற்கை நிகழ்வு.
   1. நீர்வீழ்ச்சி 2. எரிமலை 3. பூகம்பம் 4. சூறாவளி

3. பின்வருவனவற்றுள் மகுட அடவு எது?
   1. கிடதக தரிகிட தொம் 2. தாதெய்தெய்த அடவு
   3. தாங்கிடு தத்ததின்ன 4. தத்தெய்தாம் அடவு

4. தசாவதாரம் எடுக்கப்பட்ட இறைவன்.
   1.விஸ்ணு **2.** சிவன் 3. முருகன் 4. லக்குமி

5. மட்டக்களப்பு பிரதேசத்திற்குரிய கூத்து அல்லாதது.
   1. வசந்தன் கூத்து 2. மகிடிக்கூத்து
   3. காமன் கூத்து 4. பறைமேளக்கூத்து

6. ஜதீஸ்வரத்தில் அழகிற்காகச் செய்யப்படும் அடவு,
   1. மெய்யடவு 2. நாட்டடவு 3. தட்டடவு 4. குத்தடவு

7. கிண்கிணியின் அதிதெய்வம்.
   1. ஆதிபகவான் 2. விநாயகர் 3. தாராகணம் 4. அரங்கதேவதை

8. தகதிமி தக தகிட என்ற சொற்கட்டுக்குரிய ஜாதி.
   1. சதுஸ்ரம் 2. மிஸ்ரம் 3. சங்கீர்ணம் 4. கண்டம்

9. தட்சிணமேரு என அழைக்கப்படுவது.
   1. தஞ்சைப் பெருங்கோயில் விமானம் 3. காஞ்சி கைலாசபதி மாமண்டபம்
   2. சிதம்பரம் கனகசபை 4. திருவண்ணாமலை நிருத்த சபை



kalvi.lk

10. மூன்று அங்கங்களைக் கொண்ட தாளம்.

1. துருவதாளம் 2. மட்டிய தாளம் 3. ஜம்பை தாளம் 4. அடதாளம்

11. விஸ்ணு ரோகினியின் புதல்வனாக அவதரித்து துஷ்டர்களை அழிக்க எடுத்த அவதாரம்.

1. கல்வி அவதாரம் 2. கிருஸ்ண அவதாரம்

3. பலராம அவதாரம் 4. வாமன அவதாரம்

12. இராஜ வாத்தியம் என அழைக்கப்படுவது?

1. மிருதங்கம் 2. தபேலா 3. உடுக்கு 4. தவில்

13. சப்தத்தின் பகுதிகள் எவ்வாறு அழைக்கப்படும்.

1. கண்டிகை 2. பல்லவி 3. அனுபல்லவி 4. சரணம்

14. கற்றபெரய எனும் தாளவாத்தியம் பயன்படுத்துவது.

1. சப்ரகமுவ நடனம் 2. றுகுணு நடனம்

3. கண்டிய நடனம் 4. பரதநாட்டியம்

15. சிவபெருமான் ஆடிய தாண்டவங்களில் ஐந்தொழில்களையும் ஒரே உருவில் வெளிப்படுத்துவது.

1. ஆனந்த தாண்டவம் 2. கௌரி தாண்டவம்

3. திரிபுர தாண்டவம் 4. காளிகா தாண்டவம்

16. திரிபதாக முத்திரையை மட்டும் பயன்படுத்தி அபிநயிக்கும் அடவு.

1. குதித்து மெட்டடவு 2. பரவல் அடவு

3. வீச்சடவு 4. பாய்ச்சில் அடவு

17. ஒரு தாளத்தினை ஒருமுறை முழுமையாக போடுதல்.

1. ஆவர்த்தனம் 2. அங்கம் 3. லகு 4. அனுத்திருதம்

18. அபிநயம் எத்தனை வகைப்படும்.

1. 5 2. 6 3. 7 4. 4

19. உயரமான இடத்திலுள்ள பொருட்களைப் பார்க்கப் பயன்படும் தலையசைவு.

1. உத்வாஹிதம் 2. கம்பிதம் 3. துதம் 4. பரிவாஹிதம்

20. பேதங்களினால் மாற்றமடையும் தாள அங்கம்.

1. புலுதம் 2. அனுத்திருதம் 3. லகு 4. துருதம்

21. உறவு முறைகளைக் குறிக்கும் ஹஸ்தம்.

1. தசாவதாரம் 2. நவக்கிரகம் 3. பாந்தவ்ய ஹஸ்தம் 4.ஜாதிஹஸ்தம்

22. வேந்தரும் கற்றறிந்தோரும் அவையில் ஆடப்படுவது.

1. பொதுவியல் 2. வேத்தியல் 3. துணங்கை 4. வெறியாடல்.

23. மலைவளம், நாட்டுவளம் என்பவற்றை சித்திரித்துக் கூறும் கிராமிய நடனம்.

1. மீனவ நடனம் 2.வாள் நடனம்

3. குறவன் குறத்தி 4. சுளகு நடனம்.

24. "கபோலேச" என்ற சொல்லின் கருத்து

1. கல்யாணம் 2. கன்னம் 3. விவாதித்தல் 4. சேலையால் மூடுதல்



kalvi.lk

25. பாரம் மிகுந்த வில்லுடுப்பு, கரப்புடுப்பு என்பவற்றை அணிந்து ஆடும் கூத்து.

1. வடபாங்கு 2. தென்பாங்கு 3. தென்மோடி 4. வடமோடி

26. பல அடவுகளின் சேர்க்கை.

1. கோர்வை 2. எடுப்பு 3. தீர்மானம் 4. முத்திரை

27. பாட்டும் தாளமும் ஒரே நேரத்தில் ஆரம்பிப்பது

1. சம எடுப்பு 2. விசம எடுப்பு 3. அதீத எடுப்பு 4. ஆநாகத எடுப்பு

28. திஸ்ர ஜாதி துருவ தாளத்தின் அங்க அடையாளம்.

1. $/_3 0 \ 0$ 2. $/_3/_3 00$ 3. $/_3 0/_3$ 4. $/_3 0/_3/3$

29. பாத்திரத்தின் பகிப் பிராணன்களில் அடங்குவது.

1. வேகம் 2. ஆர்வம் 3. தாளம் 4. வடிவம்

30. பின்வருவனவற்றில் சாஸ்திரிய நடனம்.

1. உழவர் நடனம் 2. கும்மி 3. பரதநாட்டியம் 4. காவடி

31. கிடதக தரிகிடதொம் அடவில் பயன்படும் முத்திரைகள் எவை?

1. பதாகம், சதுரம் 2. பதாகம், கபித்தம்
3. கடகாமுகம், சிகரம் 4. பதாகம், அலபத்மம்,

32. முழு மண்டியில் இருந்து செய்யப்படும் அடவு.

1. தெய்ஹத்தெய்ஹி 2. மண்டியடவு
3. தத் தெய் தாம் 4. தத் தெய் தாஹா

33. செவ்வாய்க்குரிய ஹஸ்தங்கள்

1. அலபத்மம், சூசி 2. முஸ்டி, சூசி
3. அலபத்மம், கபித்தம் 4. பதாகம், முஸ்டி

34. எசலப் பெரஹர நடைபெறும் நாட்கள்.

1. 30 2. 90 3. 40 4. 33

35. “கருடார்த்தே” என்பதன் கருத்து.

1. கிளி 2. புறா 3. அன்னம் 4. கழுகு

36. மிஸ்ரஜாதி மட்டியதாளத்தின் எண்ணிக்கை.

1. 10 2. 12 3. 16 4. 18

37. பந்தனை நல்லூர் மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் பாணி.

1. வழுவூர்பாணி 2. பந்தனை நல்லூர்பாணி 3. காஞ்சிபுரம் பாணி 4. தஞ்சாவூர் பாணி

38. வலதுகை கடகாமுகம், இடதுகை சிகரம் எடுத்துக் கொள்ளும் தேவஹஸ்தம்.

1. இந்திரன் 2. குபேரன் 3. வருணன் 4. மன்மதன்

39. “பாதசாரிகா” என்னும் பாதநிலை,

1. பாய்தல் ஆகும் 2. சுற்றிவருதல் ஆகும் 3. நிற்றல் ஆகும் 4. நடத்தல் ஆகும்.

40. வடபாங்கு ஆடப்படும் பிரதேசம்.

1. முல்லைத்தீவு 2. மட்டக்களப்பு 3. மன்னார் 4. வவுனியா

( 40 புள்ளிகள்)

❖ **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. 1. பாத்திரப் பிராணன் எவ்வாறு அழைக்கப்படும்?
2. சிவனின் கையில் இருக்கும் " டமருகம்" எவ்வாறு அழைக்கப்படும்?
3. கூத்தினைப் பழக்குபவர் எவ்வாறு அழைக்கப்படுவார்?
4. சங்க காலத்தில் பெண்களால் ஆடப்படும் கூத்து எது?
5. ஆடை ஆபரணங்களால் கருத்தை புலப்படுத்துகின்ற அபிநயம் யாது?
6. பொருத்தமான அடவுகளைக் கொண்டு தீர்மானங்களை உருவாக்குவதில் நிகரற்று விளங்கிய கலைஞர் யார்?
7. பிரகஸ்பதி என அழைக்கப்படுபவர் யார்?
8. பாய்ச்சல் அடவு யாது?
9. தவிலின் வகைகள் எவை?
10. நிருத்த உருப்படிகள் இரண்டு தருக. (12புள்ளிகள்)

02. 1. நீர் கற்ற அலாரிப்பின் இராகம், தாளம் யாது? (2புள்ளிகள்)
2. அலாரிப்பின் இலட்சணத்தை தருக. (3புள்ளிகள்)
3. அலாரிப்பின் சொற்கட்டினை தாள, அங்க குறியீட்டில் எழுதுக. (7புள்ளிகள்)

03. பின்வரும் முத்திரைகளுக்குரிய வினியோகங்களை ஸ்லோகத்துடனும் அதன் கருத்துடனும் தருக.
1. மயூரம் 2. கடகாமுகம் 3. கபோதம் 4. புஸ்பபுடம். (4×3=புள்ளிகள்)

04. 1. அவதாரம் என்றால் என்ன? (1புள்ளிகள்)
2. அவதாரம் எத்தனை வகைப்படும்? (1புள்ளிகள்)
3. விஷ்ணு எடுத்த அவதாரங்களைக் குறிப்பிட்டு, அவற்றில் நீர் விரும்பிய ஐந்து அவதாரகங்களை விளக்குக. (10 புள்ளிகள்)

பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

05. 1. ஜதீஸ்வரம்
2. நாட்டிய தர்மி
3. ஆஹார்ய அபிநயம் ( 4×3=12 புள்ளிகள்)

06. 1. சங்க காலத்தில் காணப்பட்ட மூவகை நடனங்கள் எவை? (3புள்ளிகள்)
2. அக்காலத்தில் நடனம் ஆடுவோர் எவ்வாறு அழைக்கப்பட்னர் (3புள்ளிகள்)
3. அக்கால இசைக்கலை, நடனக்கலை பற்றி விளக்குக. (6புள்ளிகள்)

07. 1.தொழில்சார் நடனங்கள் மூன்று தருக, (3புள்ளிகள்)
2. நீர் விரும்பிய தொழில்சார் நடனம் ஒன்றின் ஆடல்முறை, ஆடை அணிகலன்கள், பக்கவாத்தியம் பாடல்அமைப்பு என்பவற்றை விளக்குக. (9புள்ளிகள்)



kalvi.lk

Follow and Get papers Daily ..!

Education கல்வி அධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page